RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# கலித்தொகையில் வாழ்வியல் மற்றும் பண்பாட்டுப் பிரதிபலிப்புகள்

**தோ. நிஷா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி(தன்னாட்சி), நாகர்கோவில் -3, இந்தியா

# Socio-Cultural Reflections in Kalithogai

**T. Nisha** [a, *]

[a] Department of Tamil, Scott Christian College (Autonomous), Nagercoil-3, India

* Corresponding Author: shekinisha@gmail.com

**ABSTRACT**

This article examines the reflections of life and culture presented in Kalithogai, one of the anthologies of Sangam literature. Although Kalithogai is generally regarded as a work of Akam (love) literature, its poems vividly portray the everyday life, social relationships, and cultural identity of the people of the Sangam age. The study focuses on key aspects of ancient Tamil society, including food habits, family and marriage traditions, social customs, recreational activities, and the practice of hospitality. The references to food in the poems reveal a way of life closely connected with nature and the ecological characteristics of different landscapes. Descriptions of family relationships and marriage customs reflect the social order and traditional values that governed ancient Tamil society. Likewise, the portrayal of games and recreational activities highlights the spirit of social interaction and communal harmony. The poems also emphasize hospitality and customary practices, illustrating the humanitarian values and culture of sharing that were central to Tamil society. Through these diverse cultural representations, Kalithogai emerges not only as a collection of love poems but also as an important cultural document that preserves the lifestyle and traditions of the Sangam-age Tamils. The study therefore argues that Kalithogai should be approached not only from a literary perspective but also as a valuable source for understanding the cultural history of ancient Tamil society.

**Keywords:** Tamil society, Kalithogai, Hospitality, Social Relationships

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் தமிழரின் பழமையான வாழ்வியல் மற்றும் பண்பாட்டு மரபுகளைப் பிரதிபலிக்கும் முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. அவற்றில் எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள கலித்தொகை, அகப்பொருளை மையமாகக் கொண்டிருந்தாலும், சங்ககால சமூக வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை நுணுக்கமாகப் பதிவு செய்கிறது. காதல் உணர்வுகளின் பின்னணியில் அக்கால மக்களின் உணவு முறைகள், திருமண மரபுகள், விளையாட்டு பழக்கங்கள், அன்றாட வாழ்வியல் நடைமுறைகள் மற்றும் விருந்தோம்பல் பண்பாடு ஆகியவை இலக்கியச் சின்னங்களாக வெளிப்படுகின்றன. கலித்தொகைப் பாடல்கள் வெறும் காதல் இலக்கியமாக மட்டுமன்றி சங்ககால சமூக அமைப்பின் கலாச்சார ஆவணங்களாகவும் விளங்குகின்றன. மக்களின் உணவுப் பழக்கங்கள் அவர்களின் தொழில் மற்றும் இயற்கைச் சூழலோடு இணைந்திருந்தன. திருமணம் சமூக ஒழுங்கின் அடையாளமாகவும், விளையாட்டுகள் சமூக உறவுகளை வலுப்படுத்தும் கருவியாகவும், பழகக்கவழக்கங்கள் பண்பாட்டு தொடர்ச்சியின் சின்னங்களாகவும், விருந்தோம்பல் தமிழர் ஒற்றுமை மற்றும் மனிதநேயத்தின் வெளிப்பாடாகவும் அமைகின்றன. இவ்வாய்வு, கலித்தொகையில் காணப்படும் வாழ்வியல் கூறுகளை ஆய்ந்து, சங்ககாலத் தமிழர் சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்களை விளக்க முனைகிறது.

## கலித்தொகை - விளக்கம்

கலித்தொகை சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகையில் இடம்பெற்ற முக்கியமான தொகுப்பாகும். இது 'கலி' என்ற யாப்பில் இயற்றப்பட்ட பாடல்களை கொண்டுள்ளது. அகப்பொருள் சார்ந்த காதல் உணர்வுகளை மையமாகக் கொண்டாலும். சங்ககால தமிழர்களின் சமூக வாழ்வியலையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துகிறது. 'குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். பாலை' ஆகிய ஐந்திணைகளின் அடிப்படையில் பாடல்கள் அமைந்துள்ளன. இயற்கைச் சூழலும் மனித உணர்வுகளும் ஒருங்கிணைந்த இலக்கியமாக இது விளங்குகிறது.

## உணவு முறைகள்

சங்ககால மக்கள் தாங்கள் வாழும் நிலத்திற்கு ஏற்ப பல்வேறு வகையான வாழ்வியல் முறைகளைக் கடைபிடித்தனர். அவர்களின் உணவு இயற்கை சார்ந்ததாக இருந்தது. "வேட்டையாடி உணவினை உண்ட சமுதாயமாக இருந்த மனிதன் இனக்குழு சமுதாயமாக மாறி, கால்நடையைத் தன் வசமாக்கி வேளாண் தொழிலை செய்து வந்தனர். அவ்வகையில் பெற்ற உணவினையே உயர்வாகக் கருதினர்".(வசந்தி.செ.,அலிஸ்.ந., ராணி,2024)குறிப்பாகச் சங்ககால மக்கள் பால் உண்ணும் பழக்கம் உடையவர்களாக இருந்தனர் என்பதனை

,"நல் நுதல் நலன் உண்டு துறத்தல் - கொண்க

தீம்பால் உண்பவர் கொங்கலம் வரைதல்" (கலி.133)

எனும் பாடலில் சுவை மிகுந்த பாலை உண்பவர் பாலை உண்ட பின்னால் பால் குடித்த கலத்தை கவிழ்த்து விடுதல் நலமா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆநிரைகளை வளர்த்து அவற்றின் பாலைத் தயிராக்கி மோரும் நெய்யும் தயாரித்து விற்றும் பயன்படுத்தியும் வந்தனர் என்பதை 'மோரோடு வந்தாள்' என்னும் பாடல் வரிகளால் அறியமுடிகிறது. சந்தன மரத்தால் செய்யப்பட்ட உலக்கையால் நெல் குற்றியச் செய்தியை,

"சாந்த மரத்தின் இயன்ற உலக்கையால்

ஐவன வெண் நெல் அறை உரலுள் பெய்து இருவாம்" (கலி.43)

என்ற பாடல் கூறுகிறது. இதன் மூலம், சங்க காலத்தில் நெல் குற்றி அரிசியைச் சமைத்து சோறாக்கி உண்டனர் என்னும் செய்தியையும் அறியலாம். ஊறுகாய் உண்ணும் பழக்கம் உடையவர்கள் என்பதை,

"மாங்காய் நறுங்காடி கூட்டுவோம் யாங்கும்" (கலி.109)

என்னும் பாடல் தெளிவுபடுத்துகிறது.

## திருமணம்

கலித்தொகை காட்டும் திருமண முறைகள் சிறந்த பண்பாட்டிற்கு அடித்தளமாக அமைகின்றன. நல்ல குடும்பத்தில் பிறந்த மகளிர் தாங்கள் விரும்பினவரையே திருமணம் செய்வர். விரும்பிய பெண்ணை பெண் கேட்கும் நிகழ்வு அக்கால வழகத்திலேயே இருந்தது என்பதை,

"தகைமிகு தொகை வகை அறியும் சான்றவர் இனமாக

வேய்ப்புரை மென்தோட் பசலையும், அம்பலுட்

மாயப் புணர்ச்சியும், எல்லாம் உடன் நீங்க,

சேய் உயர் வெற்பனும் வந்தனன்" (கலி.39)

என்னும் பாடல் வரிகளில் சான்றோர் சூழத் தலைவன் தலைவியைப் பெண் கேட்டு வந்தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் திருமணம் நிச்சயிக்கும் சடங்குமுறையும் சங்ககால வாழ்வியலில் இருந்துள்ளது.

"நெறி அறி செறி குறி புரிதிரிபு அறியா

அறிவனை முந்துறீஇ" (கலி. 39)

என்னும் பாடல் வரியில் நூல் நெறி அறிந்தவனும், திருமணத்திற்கான நல்ல நாளைக் குறிப்பதில் வல்லவனுமாகிய காலக்கணியனை முன்னர்க் கொண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குறிஞ்சி நில மக்கள் வேங்கை மரம் மலரும் காலத்தில் திருமணம் செய்தனர் (கலி. 38) சங்க காலத்

திருமணமும் இக்காலம் போலவே பெண் வீட்டில் நடந்துள்ளது. திருமணத்தின்போது வீட்டை அழகுபடுத்தும் நிகழ்வுகள் தற்போது காணப்படுவதனைப் போன்று சங்ககாலத்திலும் காணப்பட்டன என்பதை,

"திருமணல் தாழப்பெய்து இல் பூவல் ஊட்டி" (கலி.116)

என்னும் பாடல் வரிகளில் மணலைப் பரப்பி இல்லத்தினில் செம்மண்பூசி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமணத்தின்போது மணமக்கள் வெட்கப்படுதல், திருமணத்தின்போது வேதம் ஓதுதல், தீயினை வலம் வருதல் போன்ற நிகழ்வுகளும் சங்ககாலத் திருமணத்தில் இருந்தது என்பதையும் கலித்தொகை சுட்டிக்காட்டுகின்றது.

## விளையாட்டுகள்

சங்ககாலத்தில் மகளிர் வீட்டிற்கு வெளியே தம் இளம்பருவத் தோழியர்களுடன் விளையாடினர் "கவலையில் தேங்காமல் மகிழ்ச்சி மண்டிய முகத்தினராய் துள்ளலும், எழுச்சியும் நிரம்பிய வாழ்வினராய் மகளிர் சிறுசிறு விளையாடல்களில் ஈடுபட்டனர்" (பாலசுப்பிரமணியன் சி., 1983, ப.14) மகளிர் தங்களுக்கேற்ற விளையாட்டுகளை விளையாடினர். குறிப்பாக பந்து விளையாட்டுகளில் ஈடுபட்டனர் என்பதை,

"விண்தோய் வரை, பந்து எறிந்தஅயா வீட,

தண்தாழ் அருவி, அரமகளிர் ஆடுபவே" ( கலி.40)

எனும் பாடல் வரிகள் குறிப்பிடுகிறது. பெண்கள் பந்தடித்து விளையாடிய களைப்பு நீங்க, தாழ்ந்த அருவியிலே நீராடுகின்றனர் என எடுத்துரைக்கப்படுகிறது. மேலும் புனலாடல், பாவையினையும் பொம்மையையும் வைத்து விளையாடுதல், சிற்றில் இழைத்தல், சிறுதேர் உருட்டுதல், தாயம் விளையாடுதல், துணங்கை கூத்து, ஏறுதழுவுதல் போன்ற விளையாட்டுகளிலும் ஈடுபட்டனர் என்பதையும் கலித்தொகை சுட்டிக்காட்டுகின்றது.

## இசைக்கலை

மனிதனது உள்ளத்தைத் தன் வயமாக்கி, வெளிப்படும் ஆற்றலே கலை ஆகும். அக்கலைகளுள் இசைக்கலை இன்றியமையாதது. "இசையின் வயப்படாதார் அன்பின் வயப்படார் என்றே கூறுதல் அமையும். இசை வாழ்க்கையில் இன்பத்தை அளிக்கும். இசையின் அருமையையும் பெருமையையும் ஓர்ந்தே தமிழர் இசைத்தமிழை முத்தமிழுள் நடுநாயகமாக வைத்துள்ளனர்". (இராசமாணிக்கனார், 2012, ப.539) கலித்தொகையிலும் இசை பற்றியச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

"வீழுநர்க்கு இறைச்சியாய் விரல் கவர்பு இசைக்கும் கோல்

ஏழும் தம் பயன்கெட, இடைநின்ற நரம்பு அறூஉம்

யாழினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ" (கலி.8)

எனும் பாடலில் விரும்புவோர்க்கு விரலாலே மீட்டி ஒலிக்கும் நரம்பு ஏழும் பயன் இல்லாமல் போகும்படி அற்றுப்போகும் யாழினைப் போல என்று கூறப்பட்டுள்ளது. மேலும்,

"ஏழ்புணர் இன்இசை முரல்பவர்க்கு அல்லதை

யாழுளே பிறப்பினும் யாழிற்கு

அவைதாம் என் செய்யும்" (கலி.9)

எனும் பாடலிலும் ஏழு நரம்பால் கூட்டிய இனிய இசை பாடுவார்க்குப் பயன் கொடுக்கும் அல்லாது அந்த யாழிற்கு என்ன பயன் என இயம்பப்பட்டுள்ளது. இதன் மூலம் சங்ககாலத்தில் இசைக்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டுள்ளதை அறியலாம்.

## பழக்கவழக்கங்கள்

மக்களின் அறிவுத்திறனுக்கு ஏற்ப ஒரு நாட்டின் பழக்கவங்களை அறிந்து கொள்ள முடியும். சங்ககால மக்களின் பழக்கவழக்கங்களை கலித்தொகை எடுத்துரைக்கிறது. இல்லறத்தின் சிறப்பாக கருத்தப்படுவது விருந்தோம்பலாகும். இல்லம் தேடி வரும் விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்பது சங்க கால வாழ்வியலின் ஒரு பகுதியாக இருந்துள்ளது.

"மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பி

தன் நகர் விழையக் கூடின்” (கலி.8)

எனும் பாடலில் அரசனைப் பாதுகாக்க வருகின்ற விருந்தினர்களைப் பேணிப் பாதுகாத்த மனைவியின் விருந்தோம்பும் பண்பு கூறப்பட்டுள்ளது.

“சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம். அந்த வெளிப்பாடு சுவையுணர்வாகவும், நடை உடை பாவனைகளாகவும் தோன்றும்” (காவ்யா, சண்முக சுந்தரம், பல்லடம், மாணிக்கம், 2007, ப.531) அவ்வகையில், தான் ஊடல் கொள்ளக் கருதிய போதும், விருந்தோம்பல் செய்வதற்காக ஊடல் கொள்ள இயலாத நிலையைத் தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

## முடிவுரை

கலித்தொகைப் பாடல்களை வாழ்வியல் நோக்கில் ஆராயும்போது, சங்ககால தமிழர் சமூகத்தின் பல்வேறு பண்பாட்டு அடுக்குகள் தெளிவாக வெளிப்படுகின்றன. உணவு மரபுகள் இயற்கை மற்றும் தொழில் சார்ந்த வாழ்வியலை பிரதிபலிக்கின்றன. திருமண வழக்கங்கள் சமூக ஒழுங்கு மற்றும் குடும்ப மதிப்புகளை வெளிப்படுத்துகின்றன. விளையாட்டுகள் மக்களின் சமூக உறவுகள் மற்றும் பொழுதுபோக்கு கலாச்சாரத்தை எடுத்துக்காட்டுகின்றன. பழக்கவழக்கங்கள் தலைமுறைகள் கடந்து தொடர்ந்த பண்பாட்டு நினைவகங்களாக அமைகின்றன. விருந்தோம்பல் மரபு, தமிழர் மனிதநேயம், பகிர்வு உணர்வு மற்றும் ஒற்றுமை மனப்பான்மையின் உயர்ந்த வெளிப்பாடாக விளங்குகிறது. இதனால், கலித்தொகை வெறும் அக இலக்கியத் தொகுப்பாக மட்டுமன்றி, சங்ககால தமிழர் வாழ்வியலின் செறிவான பண்பாட்டு பதிவாகத் திகழ்கிறது. இந்நூலில் இடம்பெறும் அன்றாட வாழ்க்கைக் குறிப்புகள், தமிழர் பண்பாட்டு அடையாளங்களைப் புரிந்துகொள்ளும் முக்கிய ஆதாரங்களாகும். ஆகவே, கலித்தொகையை வாழ்வியல் மற்றும் பண்பாட்டு ஆய்வின் கோணத்தில் வாசிப்பது, தமிழர் நாகரிகத்தின் தொடர்ச்சியையும் அதன் மனிதநேயப் பாரம்பரியத்தையும் வெளிக்கொணரும் முக்கியமான முயற்சியாகும்.

## References

அண்ணாமலை, சுப., (2003), கலித்தொகை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.

இராசமாணிக்கனார், தமிழ்ப் பண்பாட்டு வரலாறு (2012), காவ்யா, சென்னை - 24.

காவ்யா சண்முக சுந்தரம், பல்லடம் மாணிக்கம் (2007), சங்கத் தமிழ், தொ.பா.மீ.களஞ்சியம், காவ்யா, சென்னை.

பாலசுப்பிரமணியன், சி. (1983), சங்க கால மகளிர், நறுமலர் பதிப்பக வெளியீடு, சென்னை.

வசந்தி செ., அலிஸ் ராணி ப. கலித்தொகையில் நிலம் சார்ந்த மக்களின் உணவு முறைகள், சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், (2024) தொகுதி-6 பக். எண். 419-425.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License